பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 09 புதன்கிழமை 22.05.2024 கதிர் 196

# ஜனாதிபதித் தேர்தலே முதலில்

## அடித்துக் கூறுகிறார் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்

முதலில் ஜனாதிபதி தேர்தலே நடைபெறும் என்பதை உறுதியாக கூறுவதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் ஜனாதிபதி தேர்தலே நடைபெறும். அது ஒக்டோபர் மாதம் நடைபெறும். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக முடிந்து விடும் போலிருக்கிறது தமிழ் பொது வேட்பாளர் விடயம். இந்த விவகாரத்தை அரசியல் கட்சிகள் வசம் இருந்து தாமாகத் தலையைக் கொடுத்து ஏப்ரல் 30 வவுனியாவில் கூடி தமது தோள்களில் தூக்கிக் கொண்டனர் தமிழ்ச் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு. (இந்த ஏப்ரல் 30 கூட்டத்தின் 32 பொது அமைப்புக்களும் 14 தனிநபர்களும் சேர்ந்து மே 18 விடுத்த அறிக்கையில் அதனது பெயர் கூட்டிணைவு என்றே குறிப்பிடப்பட்டிருப்பதால் நாமும் இனி அப்படியே அழைப்போம்)

அதன் பின்னர் இது விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி என்ன முடிவு எடுக்கப்போகின்றது என்பதை அறிவதற்காக 2 வாரங்கள் காத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தக் காத்திருப்புக்கு அமைய வவுனியாவில் மே 19 இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் இப்போதைக்கு ☞ 2

## பல இடங்களுக்கும் சிவப்பு எச்சரிக்கை



மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளுக்கும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சியினை எதிர்பார்ப்பதாக ☞ 2

## யானை – மனித மோதலை தவிர்க்க இரு வகை மின் வேலித் திட்டங்கள்

யானை-மனித மோதல் அதிகம் உள்ள கிராமங்கள் மற்றும் விளை நிலங்களைப் பாதுகாக்க, 'தற்காலிக விவசாய மின் வேலி' மற்றும் 'கிராம மின் வேலி' என்ற இரண்டு மாதிரித் திட்டங்களைத் தொடங்க ஆளும் தரப்புத் திட்டமிட்டுள்ளது.

காட்டு யானை-மனித மோதல்களை கட்டுப்படுத்த அண்மைக்காலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று (20) இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

இங்கு யானை - மனித மோதல்கள் அதிகம் உள்ள பகுதிகளில் இந்த மோதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும் மின்சார வேலிக்கு மேலதிகமாக, மோதல்கள் அதிகம் இடம்பெறும் ☞ 2

## புத்தளத்தில் பாதிப்பு அதிகம்

நாட்டின் பல மாவட்டங்களில் பெய்து வரும் மழையுடனான வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகூடிய பாதிப்பு புத்தளம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அங்கு 32 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக் கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, கல்பிட்டி, வண்ணாத்தவில்லு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்களே வெள்ளத்தினால் ☞ 2

## ரைசியின் இறுதிச் சடங்கிற்காக ஈரானுக்குப் பறந்தார் அலி சப்ரி

இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஈரானின் தப்ரிஸ் நகரில் நடைபெறும் மறைந்த ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக நேற்றிரவு ஈரானுக்குப் பயணமானார்.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்த ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்டவர்களின் இறுதி ஊர்வலம் ஈரானின் வடமேற்கு நகரமான தப்ரிஸில் நேற்றுத் தொடங்கியது.

இந்த நிலையில் தப்ரிஸ் நகரில் உள்ள தியாகிகள் சதுக்கத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான ஈரானியர்கள், மறைந்த ஜனாதிபதிக்கும் பிற அதிகாரிகளுக்கும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து, ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் உடல் ஈரானின் தலைநகர் தெஹ்ரானுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

அஜர்பைஜான் எல்லையில் அணை திறப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர் ஈரானின் வடமேற்கில் உள்ள தப்ரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த போது, ஈரானிய ☞ 2

## இந்தியாவின் தேவைகளுக்காகவே புதிய எரிசக்திச் சட்டமூலம் வருகிறது

### முன்னாள் கிழக்கு ஆளுநர் குற்றச்சாட்டு

இந்தியாவின் தேவைக்கு ஏற்பவே எரிசக்தி சட்டமூலத்தினை உருவாக்குவதற்கு முயற்சிப்பதாக மௌபிம ஜனதாக்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநருமான அநுராதா ஜஹம்லத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எரிசக்தியை தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்கு இந்தியா உட்பட வெளி நாட்டுச் சக்திகள் முயற்சிக்கின்றன. இதற்காக சரியான விலைமனுக் கோரல்கள் இல்லாமல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது ☞ 8

## முதலீட்டு வாய்ப்பு குறித்து ஆராய தாய்லாந்து அதிகாரிகள் வருகை

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒத்துழைப்பை ஆராய்வதற்காக தாய்லாந்து அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்று நாட்டுக்கு வருகை தந்துள்ளது, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்றிலும் கலந்து கொண்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வெளியுறவுகள் அமைச்சு, வலு சக்தி அமைச்சு, தாய்லாந்து தூதரகம், தாய்லாந்து மின்னுற்பத்தி நிறுவனம், பி.டி.டி. நிறுவனம் மற்றும் குளோபல் பவர் சினெர்ஜி பப்ளிக் கம்பெனி லிமிடெட் உட்பட பல்வேறு தாய்லாந்து நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தாய்லாந்து பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், எதிர்கால ஒத்துழைப்பு மற்றும் புதுப்பிக் ☞ 2

## போதைப் பொருள் பாவனையை ஒழிக்க பொலிஸுக்கு அதிகாரம்

### முழுமையாக வழங்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர்

போதைப்பொருள் பாவனை மற்றும் பாதாள குழுக்களின் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு பொலிஸாருக்கு முழு அதிகாரங்களையும் வழங்கியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

குற்றச்செயல்களை தெரியப்படுத்த தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தி உள்ளோம். தகவல்கள் கிடைத்ததும் பொலிஸார் உரிய இடத்துக்கு விரைந்து உரிய ☞ 2

## தற்போதைய கல்வி முறைமையை நிச்சயம் மாற்றியமைக்க வேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

தற்போதுள்ள கல்வி முறை நிச்சயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் சமூகத்தில் ஊழலை அரச கட்டமைப்பின் ஊடாக இல்லாதொழிக்க வேண்டும். ஊழல், மோசடி, கொள்ளை போன்றவற்றை தடுக்கும் பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

திருடர்களைப் பிடிப்பதற்கு அதிகாரம் வழங்குமாறு கோருவதற்குப் பதிலாக, ஐக்கிய மக்கள் ☞ 8

## சாதாரண தரத்தில் இனி தொழிற்கல்வி பாடங்கள்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் திறன் விருத்தி மற்றும் தொழிற்கல்வி பாடத்தை உள்ளடக்குவதற்கு ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக வலுவூட்டலுக்காக கல்வி முறையில் மாற்றம் வரவேண்டும். அதன்படி, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், மதம், ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முடிவெடுப்பதில்லை என்று தீர்மானித்தது.

இதையடுத்து மே 21 இந்தக் கூட்டிணைவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் யாழ்ப்பாணம், உரும்பிராயில் சந்தித்துப் பேசியது. இந்தக் கூட்டத்தில் புளொட் சித்தார்த்தன், ரெலோ செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசிக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, ஈபிஆர்எல்எவ் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேந்தன் ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர். மறுதரப்பில் அரசியல் பத்தி எழுத்தாளர்களான நிலாந்தன், யோதிலிங்கம், போராசிரியர் கணேசலிங்கம் ஆகியோர் முக்கியமாக இடம்பெற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பொது வேட்பாளர்விவகாரத்தைஇனிஎப்படி முன்னெடுத்துச் செல்வது என்கிற பெரும் சவாலுக்கு கூட்டிணைவு தள்ளப்பட்டுவிட்டது என்று தகவல். கலந்துரையாடல்கள் சாதகமாக நகர்கின்றன, இந்த விடயம் வெற்றிகரமாக முன்னகர்கின்றது என்று கூட்டிணைவுக்காரர் வெளியே சொல்லிக்கொண்டாலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகளின் பதில் பொது வேட்பாளருக்குச் சாதகமாகஇருக்கவில்லைஎன்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

முக்கியமாக இந்த விடயம் குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரான தமக்கிடையில் கொள்கையளவில் ஓர் இணக்கத்திற்கு வந்துள்ளனர் என்றுஅதன்இணைப்பேச்சாளரான சுரேஸ்பிரேமச்சந்திரன் பல மாதங்களுக்கு முன்னரே அறிவித்திருந்தார். நேற்றைய கூட்டத்திலும்கூட்டிணைவினருக்கு ஆதரவாகத்தான் கருத்துக்களைத் தெரிவித்தார். அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்பதை ஆதரித்துப் பேசினார். ஆனால் புளொட் சித்தார்த்தன் மற்றைய கட்சித்தலைவர்கள் இதுவிடயத்தில் இருந்து மெல்ல நழுவுவதற்காக தத்தமது கட்சிகளுடன் முதலில் பேசவேண்டியிருக்கின்றது என்று கூறிவிட்டனர். பொது வேட்பாளர் விடயம் கொள்கையளவில் நல்லதுதான் என்றாலும் அதனைச் செயற்படுத்துவதற்கு இது பொருத்தமான காலம் அல்லவென்றும்தெரிவிக்கப்பட்டது. தங்கள்கட்சியில்உள்ளவர்களுடன் இது தொடர்பில் ஆராய்ந்து அவர்களின்முடிவு என்ன என்பதை அறிந்துகொண்ட பின்னரே இனி இது விடயத்தில் மேற்கொண்டு பேச முடியும் என்று புளொட்டும் ரெலோவும் திட்டவட்டமாகக் கூறிவிட்டன.

கூட்டிணைவுக்காரர்களோ தமிழ்ப்பொதுவேட்பாளர்விடயத்தில் உனடியாகத் தீர்க்கமான முடிவு எட்டப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். அரசியல் கட்சிகள் கூட வந்தாலும் விட்டாலும் கூட்டிணைவு சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தத்தான் போகின்றோம் என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்தார்கள். மக்களைத் திரட்டுவதன் மூலம் தமிழ் அரசுக் கட்சியைத் தம்மை நோக்கி வரவைக்க முடியும் என்ற அதீத நம்பிக்கைக்குரிய வார்த்தைகளையும் உதிர்த்தார்கள். ஆனால் ஜனநாயகக் கூட்டணியினரோ இந்த வாய்ச்சவடால்எல்லாம்வேலைக்கு ஆகாது என்று கூட்டிணைவின் கருத்துக்களைப் புறங்கையால் ஒதுக்கிவிட்டனர்.

இது தமிழ் அரசுக் கட்சி சார்ந்த விடயம் மட்டுமல்ல, எமது மக்களுக்கும் பொருத்தமான தெரிவாஎன்றுபார்க்கவேண்டியதும் கட்டாயம் என்று சித்தார்த்தன் தெரிவித்திருக்கிறார். அரசியல் விடயங்களில் பொறுமையாக எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்துதான் முடிவெடுக்க முடியும் என்று சிறீகாந்தா விளக்கமளித்திருக்கிறார். அது மட்டுமல்ல நீண்ட விளக்கங்களையும் அவர்கள் அளித்துள்ளனர். தமிழ் மக்களை மீண்டும் ஒரு தடவை முள்ளிவாய்க்காலில்கொண்டுசென்று நிறுத்திவிடாதபடி நடந்துகொள்வது தமதுகடமைஎன்பதையும்அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடைசியில் தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் அரசியல் கட்சிகள் எல்லாம் ஆதரித்தால் தாமும் ஆதரிக்கத் தயார் என்று கூறிவிட்டு நழுவிவிட்டன கட்சிகள். இனி அவர்கள் எப்போது தமது கட்சிக் கூட்டங்களைக் கூட்டி இது தொடர்பாக ஆராய்ந்து அந்த முடிவை அறிவிப்பார்கள் என்று தெரியாது. ஏனெனில்இந்தவிவகாரம் தொடங்கிய காலத்திலிருந்தே ஈபிஆர்எல்எவ் கட்சிக் கூ-ட்டத்தைக் கூட்டும்படி ஏனைய தலைவர்கள் வலியுறுத்தி வரும்போதும் சுரேஸ் அதனை இன்னும் கூட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

அப்படிப்பட்டதொரு நிலையில் கூட்டிணைவு இனி தனித்து தமிழ் வேட்பாளர் முடிவை நோக்கி முன்னேறுமாஅல்லதுகட்சிகளையும் கூடச்சேர்த்துக்கொண்டுதான்பயனப் படுவேன் என்று அடம்பிடித்துக்கொண்டு தொடர்ந்தும் அரசியல் கூ-ட்டங்களை, வெளிப்படைத் தன்மையற்ற - கலந்துரையாடல்களில் ஈடுபடுமா என்பதற்குக் காலம் பதில் சொல்லும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தலுக்கு அரசியல் கட்சி என்ற வகையில் நாம் தயாராகவே உள்ளோம். அத்துடன் நாடும் ஜனாதிபதி தேர்தலுக்கே தயாராக வேண்டும்.

பொதுத்தேர்தல் ஒருபோதும் முதலில் நடைபெறாது. ஜனாதிபதி தேர்தலே நடைபெறும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று வெற்றி பெற்றதன் பின்னர் நவம்பர் மாதம் எட்டாம் திகதி பதவிப்பிரமாணம் நடைபெறும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தினைக் கலைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படும்.

அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் ஜனவரி மாதம்பொதுத்தேர்தல்நடைபெறும். அடுத்த சுதந்திர தினத்தின் போது பத்தாவது நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பர்.

முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்பதை மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன். இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கு தேவையான வகையில் செயற்பட முடியாது. முதலில்பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என்பது பொது ஜன பெரமுவின் தேவையாக இருக்கின்றது. நாடுஎன்றவகையில் தான் தீர்மானங்களை எடுக்க முடியும். எனினும்முதலில்ஜனாதிபதி தேர்தலே நடைபெறும் என்று ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் என்றார்.

## பல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தொடரும் பருவப் பெயர்ச்சி மழையினால் மேலும் சில தினங்களுக்கு மழையுடனான வானிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்தனகல்லு ஓயா, உருவல் ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் திவுலபிட்டிய, மீரிகம, அத்தனகல்ல, மஹர, மினுவாங்கொட, ஜா எல, கடான, வத்தளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களில்குடாகங்கை, மகுருகங்கையில் சிறு வெள்ள நிலைமை ஏற்படும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக புலத்சிங்கள, மதுராவ, பாலிந்த நுவர பிரதேச செயகத்திற்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையினால் குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் தற்போதுதிறந்துவைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குடா கங்கை வான் பாய்ந்தமையினால், புலத்சிங்கள ,மோல்காவ பிரதான வீதி, தம்பல, நாலியத்த, எட்டம்பகஸ் சந்திஉள்ளிட்டபகுதிகள்வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தப்போவ நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்று மழையுடனான வானிலை நிலவாத நிலையில், குடிசேட்மாவத்தை, சமகிமாவத்தை, கோலிததிஸ்ஸமாவத்தைஉள்ளிட்ட நகரங்கள்தொடர்ந்தும்வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை ஹெமில்டன் கால்வாயில் இருந்து நீர் வழிந்தோடியமையினால், கொழும்பு பிரதான வீதியின் மஹவெள உள்ளிட்ட சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மழையுடனான வானிலை காரணமாக தெதுரு ஓயாவின் 4 வான் கதவுகள் 3 அடி வரை திறந்து விடப்பட்டுள்ளன. நில்வலா கங்கையின் நீர் மட்டம் தற்போது உயர்வடைந்துள்ளது.

கிங் கங்கையினை அண்மித்த பகுதியில் உள்ள தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், பத்தேகம வக்வெல்ல வீதியின் எகலிய பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கலாவாவியின் இரண்டு வான் கதவுகளும் ஒரு அடிக்கு திறந்து விடப்பட்டுள்ளன. இராஜாங்னை நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதனிடையே, நிலவும் மழையுடனான வானிலை காரணமாக 8 மாவட்டங்களுக்குமண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய 8 மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு அரபுக் கடல், தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியங்களுக்குசெல்வதை மீனவர்கள், கடல்சார் தொழில்களில் ஈடுபடுவோர் மறுஅறிவித்தல் வரை அதனை தவிர்த்து செயற்பட வேண்டும்எனவளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## முதலீட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தக்க வலுசக்தியில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறு மற்றும்அவற்றைமதிப்பிடுவதற்காக, குறிப்பாக மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்துவதற்காக இப்பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளதாக அமைச்சர் தனது உத்தியோகபூர்வடுவிட்டர்பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தசந்திப்பின்போது, மின்சாரத் துறைக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள், பலதரப்பு இணைப்புகள், முன்மொழியப்பட்ட துறைசார் சீர்திருத்தங்கள், புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் தேவையான முதலீடுகள், பசுமை ஹைட்ரஜனின் சாத்தியம் மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான ஆற்றல் ஒத்துழைப்புக்கான வழிகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

## புத்தளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் 12 கிராமசேவகர் பிரிவுகளில் 6,815 குடும்பங்களை சேர்ந்த 25,529 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முந்தல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவகர் பிரிவில் 855 குடும்பங்களைசேர்ந்த 3,042 பேர்கள்பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 537 குடும்பங்களை சேர்ந்த 1775 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு 10 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 6 தற்காலிக முகாம்களும், முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 3 தற்காலிகமுகாம்களும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் ஒரு தற்காலிக முகாமும் அமைக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் நிலவும் வெள்ள நிலைமையினால் மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்றும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## யானை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களில்தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னோடித் திட்டமாக விவசாய நிலங்களைப்பாதுகாக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடை மேற்கொள்ளப்படும் சமயம் வரை மாத்திரம் உரிய விவசாய நிலங்களைப் பாதுகாக்க தற்காலிக விவசாய மின்வேலி அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

காட்டுயானை-மனிதமோதல்கள் அதிகம் உள்ள கிராமங்களைப் பாதுகாக்கும்வகையில்கிராமத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ள மின்வேலிக்கான முன்னோடித் திட்டம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

சம்பந்தப்பட்ட விவசாயிகள் விவசாய பணிகளை தொடங்கும் நேரத்தில் அறுவடை செய்த பின் விவசாய மின் வேலியை அகற்ற வேண்டும். மின்வேலியின் பராமரிப்புமற்றும்பொறுப்பைகமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்குவதுடன், கிராம வேலியின் பொறுப்ப மற்றும் பராமரிப்பு பணிகளை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்குவது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

பல்வேறு கலாச்சார நிகழ்வுகள் மற்றும்பெரஹரா என்பவற்றுக்காக யானைகளை வழங்குகையில் தனியாரிடமுள்ள யானைகளுக்கு மேலதிகமாக, பழக்கப்பட்ட யானைகளைக் கொண்ட பட்டியலொன்றை பேணுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த தீர்மானங்களை அமுல்படுத்துவதில் எழும் சிக்கல்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்குகையளிப்பதற்காக தயாரப்படுத்துமாறும்சாகலரத்தாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

## போதைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுப்பர் .போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்கள் பற்றிய தகவல்களையும் தைரியமாக இந்த தொலைபேசிஇலக்கத்துக்குவழங்க முடியும். இவ்வாறானவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி அவர்களை மீட்டெடுப்போம்.போதைப்பொருள்விற்பனையாளர்களைஒழிப்பதற்காகவேயுக்திய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித் தோம்.போதைப்பொருள் பாவனையாளர்களை விரட்டுவது அல்லது தண்டிப்பதை விடவும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

நாம், அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், போதைப்பொருளிலிருந்து எமது கிராம், நகரம் மற்றும் நாட்டை வெகு விரைவில் மீட்டெக்க முடியும். எனவே இப்பணிக்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பது மக்களின் பாரிய பொறுப்பு.

இவ்விடயத்தில் எவ்வாறான அச்சறுத்தல்கள் வந்தாலும், தவறு நடக்கக்கூடாதென, பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸாருக்கும் உறுதியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவும், இந்த விடயத்தில் எனக்குமுழுமையானஅதிகாரத்தை வழங்கியுள்ளார். யுக்திய நடவடிக்கைகளில், ஒருபோதும் ஜனாதிபதிதலையிட்டது கிடையாது.

போதைப்பாவனையிலிருந்து நாட்டை காப்பாற்ற வேண்டிய தேவை ஜனாதிபதிக்கும் உள்ளது. யுக்திய இராணுவ நடவடிக்கையில்கைதானவர்களை விடுதலை செய்யுமாறு அதிகமான அழைப்புக்கள்வருவதாகபொலிஸ்மா அதிபர் என்னிடம் தெரிவித்தார்.

நான், இந்த அமைச்சுப் பதவியில் இருக்கும் வரை இதற்கு இடமளிக்கமாட்டேன். பொதுமக்கள் எம்முடன் இணைந்துநேர்மையாக செயற்பட்டால் மாத்திரமே, போதைப்பாவனையிலிருந்து நாட்டை, மீட்டெடுக்க முடியும் என்றார்.

## ரைசியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பயணித்த உலங்கு வானூர்தி திங்கட்கிழமைவிபத்திற்குள்ளானது.

குறித்த விபத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, அந்த நாட்டின் வெளிவிகாரஅமைச்சர்ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்திருந்தனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# குழாய்க் கிணறு மற்றும் குடிதண்ணீர் வசதி சாய்ந்தமருது பாடசாலைக்குக் கிட்டியது

## மலேசிய தூதுவர் திறந்து வைத்தார்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் தேவை கருதி, றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பினருக்கு பாடசாலை சமூகம் விடுத்த வேண்டுகோளினை ஏற்று, மாணவர்களுக்கான குடிநீர் விஸ்தரிப்பு மற்றும் குழாய்க்கிணறு தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பின் தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான றஹ்மத் மன்சூர் மற்றும் மலேஷிய உயர்ஸ்தானியர் பட்லி ஹிஸாம் ஆதம் அவரது பாரியார் சகிதம் கலந்து கொண்டு மேற்படி திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

பாரம்பரியக் கலையான எம்.ஐ. அலாவுதீன் தலைமையிலான முஹம்மதிய்யா கலை மன்ற கோலாட்டம் மற்றும் ரபான் குழுவினரால் உயரிய கௌரவம் கொடுத்து அதிதிகள் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில், றஹ்மத் பௌண்டேஷன் அமைப்பின் தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான றஹ்மத் மன்சூர் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள், வை.டபிள்யூ.எம்.ஏ. அமைப்பின் தலைவி திருமதி பவாசா தாஹா மற்றும் அமைப்பின் செயலாளர், பொருளாளர், முன்னாள் தலைவர், அமைப்பின் ஏனைய அங்கத்தவர்கள், பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வரவேற்பு வழங்கிய மாணவ மாணவிகளுக்கு உயர்ஸ்தானிகர் பாரியாரால் இனிப்புப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.





மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைப்பினரால் பாடசாலை சமூகத்தால் வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, பாடசாலை மைதானத்திற்கான பவிலியன் ஒன்றை எதிர்காலத்தில் அமைத்துத் தருவதற்கான வாக்குறுதியும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஒலிவில் பிரதேசத்தில் பொதுக்கிணறு திறப்பு



(எம்.எப்.றிபாஸ்)

ஒலிவில் பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதி பொதுக்கிணறு திறந்து வைக்கப்பட்டது.

ரஹ்மத்பவுண்டேஷனின் ஏற்பாட்டில் வை.டப்ள்யூ .எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கட்டப்பட்ட இவ்பொது கிணற்றை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ரஹ்மத்பவுண்டேஷனின் ஸ்தாபகருமான ரஹீமத் மன்சூரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற நிகழ்வுக்கு இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் எச்.இ. பட்லி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாகவும், வை. டப்ளியூ. எம்.ஏ. அமைப்பின் தலைவியுமான பவாஸா தாஹா கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.



ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கருகில் மீனவர் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் இப் பொது கிணற்றை பயன்படுத்துவதுடன் கலந்து கொண்ட அதிதிகளால் கிணற்றுக்கருகில் தென்னை மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

(05)

# பல் மருந்துவப் பொருள்கள் கல்முனைக்கு அன்பளிப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட வைத்தியசாலைகளில் உள்ள பற்சிகிச்சைப் பிரிவுகளில் குறிப்பிட்ட சில மருந்துகள் தட்டுப்பாடாகவுள்ளன.

குறித்த மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து சிறந்த சேவையினை வழங்கும் நோக்கில் கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஹபீப் முஹம்மட் மிக அவசியத் தேவையாக காணப்பட்ட ஒரு சில மருந்து களை வழங்கியுள்ளார்.

குறித்த மருந்துப் பொருள்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் மற்றும் பிராந்திய உளநல மருத்துவ பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.நௌபல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வைத்தியர் ஹபீப் முஹம்மட்டின் முன்மாதிரியான இந்த செயற்பாட்டினை பாராட்டிய பணிப்பாளர் அவருக்கு நன்றியையும் தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalāikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முறையான, விரிவான ஆய்வுகளுக்கு பின்னரான கொள்கையொன்று தேவை

தற்போதுள்ள கல்விமுறை நிச்சயம் மாற்றியமைக்கப்படவேண்டும் என்றும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியிருக்கிறார். அதுபோன்றே எதிர்காலத்திற்குப்பொருத்தமானகல்வியைநோக்கி நாம் நகர வேண்டும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்தெரிவித்துவருகின்றார். அதன்படி பாடசாலைக் கல்வியிலும் பல்கலைக்கழகக் கல்வியிலும் மாற்றங்களைப் புகுத்த ஆளும் தரப்பினர்முயற்சிகளைமேற்கொண்டுவருகின்றனர். புதிய மாற்றங்கள் குறித்தும் பல அறிவிப்புக்கள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளன.

இப்போது மட்டுமல்ல அனேகமாக ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் இதுபோன்று கல்வித்துறையில் மாற்றங்கள் புகுத்தப்படுவது வழக்கம். வகுப்புகளாக இருந்தவை தரங்களாக மாறி பின்னர் அவை ஆண்டாக மாறி மீண்டும் தரமாக மாறுகின்ற வகையிலான கல்வித்துறை மாற்றங்கள் கடந்த காலங்களிலும் கணிசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அவை எவையும் நவின உலகிற்கு ஏற்றவகையில் இல்லை என்று பின்னாட்களில் குற்றஞ்குறை சொல்லப்படுவதும் வழமையாகிவிட்டது.

உண்மையில் இலங்கையின் தேவைக்கு ஏற்ற, அதன் அகப் புறச் சூழலுக்கு ஏற்ற, உலக மற்றும் உள்ளூர் தொழிற் சந்தைக்கு ஏற்ற வகையிலான கல்வி முறைமை குறித்துக் கண்டறிவதற்கான முழுமையான ஆய்வு எதுவும் இதுவரையில் நடத்தப்பட்டதாக இல்லை. அப்படிப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் கல்விக் கொள்கை தயாரிக்கப்படுவதாகவும் இல்லை. ஒவ்வொரு ஆட்சியின் போதும் சில பல மேம்படுத்தல்களே (அப்டேட்) கல்வித்துறையில் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றவே தவிர, இலங்கை அரசியல் பன்மைத்துவத்திற்குஏற்றவகையிலானநாட்டிற்குச் சிறந்த எதிர்காலத்தைக் கட்டமைக்கத் தக்க கல்வி முறை ஒன்றின் தேவை குறித்த முறைசார் ஆய்வுகளோ கட்டடைவுகளோ காணப்படவில்லை.

இதனாலேயே ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் இதுபோன்ற எமது கல்விமுறை பொருத்தமற்றதாகஉள்ளதுஎன்கிறகுற்றச்சாட்டைக் கேட்கவேண்டியதாக உள்ளது. இந்த நிலமை மாறவேண்டுமானால் இலங்கையின் கல்வித் தேவை குறித்து நீண்ட, விரிவான ஆய்வுகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டு, அரசியல் கபட எண்ணங்களற்றவகையில்நேர்மையானகல்விக் கொள்கைகள்வகுக்கப்படவேண்டும். இடைக்காலத் தீர்வுகளை நோக்கியன்றி இலங்கையர்கள் பயனுள்ள நிரந்தரத் தீர்வை நோக்கியதாக இந்த கல்விக் கொள்கை அமைக்கப்படவேண்டியது அவசியம்.

# திருகோணமலை, பாரதிபுரம் படுகொலைகளும் நீதியும்

**ருக்கி பெர்னான்டோ**

மூன்று தசாப்த காலப் போரின்போது பொதுமக்களைக்கொலைசெய்வதுஉட்படஏனைய அட்டூழியங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் பரவலாக இடம்பெற்றன. இதுபோன்றபலபடுகொலைகளுக்கு இலங்கை ஆயுதப் படைகள், காவல்துறை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE)



தான் காரணம் என்று நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் சூழ்நிலை ஆதாரங்களின்படி குற்றம் சாட்டப்படுகிறது. இத்தகைய கொலைகளுக்காக உள்நாட்டு நீதிமன்றங்கள் மூலம் இலங்கை ஆயுதப் படைகளும் பொலிஸாரும் பொறுப்புக் கூறுவது அரிது. அது போன்றதொரு வழக்கைப் பற்றித்தான் இங்கு பேசப்படப்போகிறது.

## சம்பவம்

பாரதிபுரம், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம். கந்தளாய் பொலிஸாரின் கீழ் இயங்கும் இந்தக் கிராமத்திலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியானது 1998ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி இரவு முதல் பெப்ரவரி 1 ஆம் திகதி அதிகாலைவரை தாக்குதலுக்கு உள்ளானது. தாக்குதலினால் பொலிஸாருக்கு காயங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. இதையடுத்து பெப்ரவரி 1, 1998 அன்று, அருகிலுள்ள பொட்கேனி கிராமத்தைச் சேர்ந்த 8 பேர், குறைந்தது இரண்டு பதின்மவயதுக் குழந்தைகள் உட்பட அனைத்து ஆண்களும் கடத்தப்பட்டனர், பின்னர், அவர்களின் உடல்கள் சோதனைச்சாவடிக்குஅருகில்கண்டெடுக்கப்பட்டன. கடத்தப்பட்டவர்களைபொலிஸ்சீருடையில்ஆயுதம் ஏந்தியவர்கள் அழைத்துச் சென்றனர் எனவும், ஆனால் அவர்கள் முகத்தை மூடியிருந்தனர் எனவும், அடையாளம்காணமுடியாதபடிஇருந்தனர் எனவும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

பொன்னம்பலம் கனகசபை, ஆறுமுகம் சேகர், அமிர்தலிங்கம் சுரேந்திரன், அமிர்தலிங்கம் கஜேந்திரன், குணரத்தினம்சிவராஜா, சுப்பிரமணியம் திவாகரன், நாகன் பச்சலநாதன் மற்றும் முருகேசு ஜெகனன் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் கொல்லப் பட்டனர்.

ஒரு இளம் பெண் தனது வீட்டிலிருந்து ஆயுதம் ஏந்திய நபர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டு சோதனைச் சாவடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் சுட்டுக்கொல்லப்படுவார் என்று அச்சுறுத்தப்பட்டார். அவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். பின்னர், மூத்த போலீஸ் அதிகாரி அவரை விடுவிக்க உத்தரவிட்டார். கொல்லப்பட்ட 8 பேரில் ஒருவரான சிவராஜா அந்தச் சோதனைச் சாவடியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்படுவதை அந்தப் பெண் நேரடியாகப் பார்த்தார். அவளால் அடையாளம் காண முடியாத மற்றொரு உடலையும் சிவராஜாவின் அருகில் அவள் பார்த்தாள். தன்னை கடத்திச் சென்று அடித்த ஒருவரைத் தன்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காண முடிந்தது என்று அந்தப் பெண் பின்னர் தெரிவித்தார்.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, பலியானவர்களில் ஒருவரின் சகோதரரும் சுட்டுக் கொல்லப்பட்டார். 2007இல், பொட்கேணியில் உள்ளகுடும்பவீட்டிற்குஅருகிலுள்ளபத்தினிபுரத்தில் உள்ள ரயில்வே கிராசிங்கிற்கு அருகில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது தந்தையின் கூற்றுப்படி, குற்றத்திற்கு காரணமானவர்கள் பொறுப்புக் கூறவில்லை.

## விசாரணைகள்

கந்தளாய் பொலிஸாராலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினராலும் (சிஐடி) சில விசாரணைகளின் பின்னர், 13 பொலிசார் மற்றும் ஊர்க்காவல் படையினர் (கிராம காவலர்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர்) கைது செய்யப்பட்டனர். சட்ட மா அதிபர் (AG) 2005இல் 13 பேருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகளை பதிவு செய்தார். குற்றவியல் சட்டத்தின் அடிப்படையிலும், சட்டத்திற்குப் புறம்பாகக் கூடியது மற்றும் கடத்தல் தொடர்பான அவசரகால விதிகளின் அடிப்படையிலும், தவறாகவும் இரகசியமாகவும் காவலில் வைத்துக் கொலை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் 2017ஆம் ஆண்டில், அவர்களில் 6 பேருக்கு எதிரான (சந்தேகநபர்களான 9, 10, 11, 12 மற்றும் 13) குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர்வாபஸ்பெற்றார். 7ஆவது குற்றவாளிகொலை செய்யப்பட்டார். எனவே, குற்றம்சாட்டப்பட்ட 7 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

கொல்லப்பட்ட 8 பேரும், குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் துப்பாக்கியால் கொல்லப்பட்டனர் என்பது சந்தேகநபர்கள் தரப்பால் மறுக்கப்பட வில்லை.

36 சாட்சிகள் அரசுத் தரப்பால் அழைக்கப்பட் டனர், பலர் ஜனவரி 31 இரவு முழுவதும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது என்றும் மறுநாள் அதிகாலை பாரதிபுரம் சோதனைச் சாவடியைச் சுற்றி துப்பாக்கிச் சூடுகேட்டதாகச்சாட்சியம்அளித்தனர். வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு வீட்டிற்கு அருகிலுள்ள சோதனைச் சாவடியை நோக்கி அழைத்துச் செல்லப்பட்ட அவரது சகோதரரும் அவரது மைத்துனரும் பின்னர் சடலமாக மீட்கப்பட்டனர் என்று சாட்சி ஒருவர் சாட்சியமளித்துள்ளார். இதைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் நிராகரிக்க முடியவில்லை. அவரது வீட்டில் நடந்த நிகழ்ச்சியின்போதுதுப்பாக்கிதாரிகளால்கடத்தப்பட்ட உறவினர்கள் மற்றும் அயலவர்கள் உட்பட 6 பேர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டனர் என்று மற்றொருவர் சாட்சியம் அளித்திருந்தார். அருகில் இருந்த வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட தனது மகன் பின்னர் சடலமாக மீட்கப்பட்டதாக மற்றுமொரு சாட்சி சாட்சியமளித்துள்ளார். இவை அனைத்தும் பெப்ரவரி 1 ஆம் திகதி

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# திருகோணமலை, பாரதிபுரம் படுகொலைகளும் நீதியும்

4ம் பக்க தொடர்ச்சி...........

அதிகாலையில் நடந்தன என்று அவர்கள் தெரிவித்தனர்.

பெப்ரவரி முதலாம் திகதி காலை சிவில் உடையில் 2 சடலங்களை சோதனைச் சாவடிக்குள் பார்த்தனர் எனவும், ஐந்தாம் குற்றவாளியான சோமரத்னாவையும் அங்கு பார்த்தனர் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் சாட்சியமளித்திருந்தார். ஆனால், காவல்துறை மற்றும் சிஐடியிடம் அவர் அளித்த முந்தைய வாக்குமூலங்களில் உள்ள முரண்பாடுகள் காரணமாக அவரது சாட்சியத்தை புறக்கணிக்க நீதிமன்றம் முடிவு செய்திருந்தது. 2ஆவது குற்றவாளி (கோனாரா) இரண்டு பொதுமக்களை சோதனைச் சாவடிக்கு அழைத்து வருவதைக் கண்டனர் எனவும், பின்னர் அந்த இரண்டு பொதுமக்களுக்கு அருகில் 4வது குற்றவாளி (ரணராஜ பண்டார) பார்த்தார் எனவும் மற்றொரு போலீஸ்காரரர் சாட்சியம் அளித்தார். மற்றொருநபர் (குற்றம் சாட்டப்பட்டவர்களில்யாரும் இல்லை) சோதனைச்சாவடிக்குப் பின்னால் இருவரையும் அழைத்துச் சென்றனர் எனவும், பின்னர் அவர்கள் இறந்துவிட்டதைத் தான் கண்டார் எனவும் கூறினார். இந்தச் சாட்சியங்களும்கூட எதிராளிகள் தரப்பால் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை. 2ஆம், 4ஆம் மற்றும் 8ஆம் குற்றவாளிகள் (மெதவெல) அன்று காலை சோதனைச் சாவடியில் முன்னிலையாகி நீதிமன்றில் அடையாளம் காணப்பட்டனர் மற்றுமொரு பொலிஸார் சாட்சியமளித்திருந்தார். மேலும் 5ஆவது குற்றவாளியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டிய அவர், 5ஆவது குற்றவாளி இரண்டு பொதுமக்களை சோதனைச் சாவடிக்கு அழைத்து வந்ததை தான் பார்த்தார் எனவும், பின்னர் 2ஆவது குற்றவாளியால் அந்த இரண்டு பொதுமக்களையும் சோதனைச் சாவடிக்கு பின்னால் அழைத்துச் சென்றனர் எனவும் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும், அவர் சோதனைச் சாவடிக்குப் பின்னால் சென்றபோது, 4ஆவது குற்றவாளி அருகில் உள்ள அறையில் இரண்டு பொதுமக்களை மெத்தையில் கைகளை பின்னால் கட்டிய நிலையில் வைத்திருந்ததையும் பார்த்துள்ளார். முதலாம் குற்றவாளி (சந்திரரத்ன) இரண்டு பொதுமக்களையும் வெளியில் அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றதை தாம் பார்த்தார் எனவும் அவர் சாட்சியமளித்துள்ளார். இந்த சாட்சி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பினரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார், ஆனாலும் மேலே விவரிக்கப்பட்ட அவரது சாட்சியம் சவால் செய்யப்படவில்லை. இந்தச் சாட்சி மேலும் சாட்சியமளிக்கையில், 8ஆவது குற்றவாளியும் மேலும் சிலரும் மேலும் சில பொதுமக்களைச் சோதனைச் சாவடிக்கு அழைத்து வந்தனர் எனவும், அதன் பின்னர்தான் மேலும் மூன்று பொதுமக்களின் சடலங்களை பார்த்தனர் எனவும் கூறினார். சிவில் பாதுகாப்புப் படையின் (ஸீம்ய்) சாட்சி ஒருவர், சோதனைச் சாவடிக்கு அருகில் சில பொதுமக்களைக் கண்டார் எனவும், பின்னர், சோதனைச் சாவடிக்குப் பின்னால் அவர்களது சடலங்களைப் பார்த்தார் எனவும் சாட்சியம் அளித்திருந்தார். இந்தச் சாட்சியமும் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து பாதுகாப்பு மற்றும் கப்பல்துறை அறிக்கைகளுக்கான சாட்சிகள்

சந்தேகநபர்களின் தரப்பு சாட்சியின்போது, அவற்றுள் ஒன்றான பிரதான பொலிஸ் பரிசோதகர் சில்வாவின் சாட்சியத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்று அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை சுட்டிக்காட்டியது. அரச தரப்பும் இதை ஏற்றுக்கொண்டது. சந்தேகநபர்கள் தரப்பின் மற்றொரு சாட்சியான உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏஎஸ்பி) நாரம்பனாவவின் சாட்சியமானது அரச தரப்பு முன்வைத்த சாட்சியங்களை எவ்விதத்திலும் சவால் செய்யவில்லை என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட 7பேரில்யாரும்சத்தியப்பிரமாணத்தின் பேரில் சாட்சியம் அளிக்கவில்லை, தலைமறைவாக இருந்த முதலாவது குற்றவாளியிடம் இருந்து எந்த ஆவணமும் இல்லை. 2ஆவது குற்றவாளி, அருகில் உள்ள கிராமத்தில் இருந்து இரண்டு பொதுமக்களை சோதனைச் சாவடிக்கு அழைத்து வந்ததை மறுக்கவில்லை. 4ஆவது குற்றவாளி இந்தச் சம்பவம் பற்றி தனக்குத் தெரியாது என்று மறுத்தார், ஆனால் அவர் ஒரு மூத்த போலீஸ் அதிகாரி (இன்ஸ்பெக்டர்). அவர் முன்னிலையில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனவும் இது தொடர்பில் அவருக்கு சில பொறுப்புகள் இருப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டது. 5ஆவது குற்றம் சாட்டப்பட்டவர் பொதுமக்களை சோதனைச் சாவடிக்கு அழைத்து வந்ததான0 சாட்சிகளின் அறிக்கைகளை மறுக்கவில்லை. 8ஆவது குற்றம் சாட்டப்பட்டவர் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் தான் இல்லை என்று மறுத்துள்ளார், ஆனால் தனிப்பட்ட விரோதம் காரணமாக தனக்கு எதிரான சாட்சியத்தை அவர் சவால் செய்யவில்லை என்று நீதிமன்றம் கண்டறிந்தது.

## தீர்ப்பு

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் 1513631 இலக்கம் கொண்ட வீ-56 ரக ஆயுதம் என அரசாங்க பகுப்பாய்வாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆயுதம் பாரதிபுரம் சோதனைச் சாவடிக்கு வழங்கப்பட்டமை விசாரணையின்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அது யாருக்கு வழங்கப்பட்டது என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் யாரும் ஆயுதம் பயன்படுத்தியதற்கான ஆதாரம் இல்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

1வது குற்றச்சாட்டின் பேரில், கொலை செய்ய சட்டத்திற்குப் புறம்பாக ஒன்றுகூடியதாக, 1வது, 2வது, 4வது, 5வது மற்றும் 8வது குற்றம்சாட்டப்பட்டவர்கள், கொலை நோக்கத்துடன் சட்டவிரோதமாக கூடியிருந்த குற்றவாளிகள் என்று நீதிமன்றம் முடிவு செய்தது. குற்றவாளிகளாகக் காணப்பட்ட காவல்துறையினரின் பெயர்கள் கீழே;

கொஹொனகோரலாலாகே சந்திரரத்ன பண்டார, கோனார முதியன்சேலாகே நிஹால் பிரேமசிறி கோனார, ராஜபக்ச முதிதன்சேலாகே ரணராஜ பண்டார, யாகம லியனகே சோமரத்ன மற்றும் ரட்டேரலாலாகே செனரத் பண்டார மெதவெல

2வது குற்றச்சாட்டுகள் (குற்றச்சாட்டுகள் 2-9) கொலையுடன் தொடர்புடையவை மற்றும் 3வது குற்றச்சாட்டுகள் (குற்றச்சாட்டுகள் 10-17) தண்டனைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின்படி 'பொது நோக்கத்தின்' அடிப்படையில் அமைந்தன. போதிய ஆதாரங்கள் இல்லாததால் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய நீதிமன்றம் முடிவு செய்தது. 4 வது கிளஸ்டர் குற்றச்சாட்டுகள் (குற்றச்சாட்டுகள் 18-37) கடத்தல் பற்றியது. 2ஆவது,4ஆவது மற்றும் 8ஆவது குற்றவாளிகள் பொதுமக்களை சோதனைச் சாவடிக்கு அழைத்து வந்ததாக அரசு தரப்பு நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்திருந்தாலும், அவர்கள் பொதுமக்களை அவர்களது வீடுகளில் இருந்து கடத்திச் சென்றதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. இறந்தவர்களின் உறவினர்கள் பலர் கடத்தப்பட்டதற்கான சாட்சியங்களை வழங்கியிருந்தும், கடத்தப்பட்டவர்கள் எவரையும் யாராலும் அடையாளம் காண முடியவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. இதனால், குற்றஞசாட்டப்பட்ட அனைவரையும் இந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து நீதிமன்றம் விடுவித்தது.

தன்னைக் கடத்திய குழுவில் 6வது குற்றவாளி என ஒரு பெண் திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார், ஆனால் சம்பவம் நடந்த உடனேயே நடந்த அடையாள

தொடர்ச்சி 7ம் பக்கம்...........


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பசறையில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைக்கலப்பாக மாறியது

## வீடு ஒன்றும் தீக்கிரை

பசறை டெமோரியா பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி பின்னர் கைக்கலப்பாக மாறியதில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் வீடொன்று தீவைத்து முற்றாக எரிக்கப்பட்டுள்ளதாகவும் பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் டெமோரியா (ஏ) தோட்டம் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த 25 மற்றும ;30 வயதுடைய இருவர் எனவும் ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 10.30 மணியளவில் இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் குறித்த வீட்டுக்கு தீ வைத்துள்ளார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தீயால் வீடு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாகவும் காயமடைந்த இருவரும் பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பபட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# வற்றாப்பளைக்கு இளைஞர்களை ஏற்றிச்சென்ற டிரக்டர் விபத்து

## சிறுவர் சாவு; ஐவர் படுகாயம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேராவில் வளைவு பகுதியில் உழவு இயந்திரம் பெட்டி குடை சாய்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன், ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மேற்படி விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வுக்கு உழவு இயந்திரத்தில் பயணித்த இளைஞர் குழுவே இந்த விபத்தை சந்தித்துள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் உழவியந்திரம் ஒன்றில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளை வேகமாக சென்ற உழவு இயந்திரம் தேராவில் வளைவு பகுதியில் திருப்ப முற்பட்டபோது பெட்டி கழன்று தடம் புரண்டுள்ளது.

மேற்படி விபத்தில் உழவனூர் பகுதியைச் சேர்ந்த 16 அகவையுடைய ர.மிதுசிகன் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

உயிரிழந்த இளைஞனின் உடலம் மூங்கிலாறு பிரதேசவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பாக புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

(05)

# திருகோணமலை, பாரதிபுரம்....

5ம் பக்க தொடர்ச்சி...........

அணிவகுப்பின் போது அவரை அடையாளம் காணத் தவறிவிட்டதாக நீதிமன்றம் குறிப்பிட்டது, மேலும் 6ஆவது குற்றவாளியை விடுவித்தது. சந்தேகத்திற்கு இடமின்றி தனது குற்றத்தை வெளிப்படுத்த முடியும். 3ஆவது குற்றவாளிக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டார்.

## பிரதிபலிப்புகள்

குடும்பத்தாரின் கூற்றுப்படி, இழப்பீடாக ரூ. ஒருநபருக்கு 50,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் போரின்போது விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட பின்னர் இராணுவத்தினரும் பொலிஸாரும் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்திய பல தாக்குதல் சம்பவங்களில் ஒன்றாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்ட பொதுமக்களை 'புலிகள்' என்று முத்திரை குத்த முயற்சிக்கும் அணுகுமுறை இந்த வழக்கிலும் நடந்துள்ளது, ஒரு ஏஎஸ்பி எந்த அடிப்படையும் இல்லாமல் நீதிமன்றத்தில் இதை செய்ததாக ஒப்புக்கொண்டார். இறந்தவர்கள் தாங்கள் எதிர்த்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று கூறும் ஆவணங்களில் கையெழுத்திடுமாறும் அக்குடும்பங்கள் அச்சுறுத்தப்பட்டன.

இராணுவமும் பொலிஸாரும் தமிழர்களைக் கொன்றனர் அல்லது பலவந்தமாகக் காணாமற்போகச செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்படும் வழக்குகள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு மாற்றப்படும் போக்கையும் இந்த வழக்கு ஓரளவிற்குப் பின்பற்றியது. இவ்வாறு வழக்குகள் மாற்றப்படும்போது நீதிமன்ற மொழி பெரும்பாலும் சிங்கள மொழியில் இருப்பதால், பாதிக்கப்பட்ட தமிழ் குடும்பங்களுக்கு பயணம் செய்வதற்கும், சட்டப்பூர்வ பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கும், வழக்கைப் பின்பற்றுவதற்கும் இது கடினமாகிவிட்டது. இந்த வழக்கில், பாதிக்கப்பட்ட தமிழ் குடும்பங்கள் தீர்ப்பைக் காண ஆர்வமாக இருந்தன, ஆனால் அது சிங்களத்தில் உள்ளது.

கொலைக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்த நீதிமன்றம், கொல்லப்பட்ட 8 பேரில் இருவரை 1வது குற்றவாளி சுட்டுக் கொன்றது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக ஏற்றுக்கொண்டது. ஆனால், அவரும் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் பாரதிபுரம் சோதனைச் சாவடிக்கு வழங்கப்பட்டதாக நீதிமன்றம் தீர்மானித்தது, ஆனால் தீர்ப்பில் சோதனைச் சாவடிக்கு பொறுப்பானவர் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. எவ்வாறாயினும், 4ஆவது குற்றவாளி ஒரு மூத்த அதிகாரி (இன்ஸ்பெக்டர்) சோதனைச் சாவடிக்கு பொதுமக்களை அழைத்து வருவதற்கான நோக்கத்தை விசாரிக்கவில்லை, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை, அவர்கள் இறக்கும் வரை அமைதியாக இருந்தார், இது அவர்களை கொல்ல வேண்டும் என்ற அவரது நோக்கத்தை சுட்டிக்காட்டுகிறது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஐந்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஊர்க்காவல் படையினரின் தண்டனைக்கு வழிவகுத்த மிக முக்கியமான சில சாட்சியங்கள் பொலிஸ்காரரர்கள் மற்றும் ஒரு ஊர்க்காவலரிடமிருந்து வந்தவை.

37 குற்றச்சாட்டுகளில் 1 குற்றச்சாட்டுக்கு மட்டுமே தண்டனை விதிக்கப்பட்டுள்ளது மற்றும் தண்டனை பெற்றவர்கள் ஒப்பீட்டளவில் இளைய அதிகாரிகள். இந்த வழக்கில் 26 ஆண்டுகள் குடும்பங்கள் நீதிக்காக காத்திருக்கின்றன. இது நீண்ட காலமாகும். ஆனால், தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு காவல்துறையினரைப் பொறுப்பேற்கச் செய்யும் இந்த அரிய தீர்ப்பு, இதேபோன்ற வேறு சில வழக்குகளிலும் நீதி கிடைக்கக்கூடும் என்ற எச்சரிக்கையான நம்பிக்கையை அளிக்கிறது.



## சாதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழி போன்ற பாடங்களில் சித்திபெறாமை, பரீட்சையில் சித்திபெறாததாகக் கருதக்கூடாது. எனவே, க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் பாடத்திட்டத்தில் திறன்விருத்திமற்றும்தொழிற்கல்வி பாடத்தைஉள்ளடக்குவதற்குஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்தை அடுத்த ஆண்டிலிருந்துநடைமுறைப்படுத்த கல்விஅமைச்சு முடிவுசெய்துள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் ஒரு முழுமையான நிபுணத்துவத்துவம் மிக்கவர்களைஉருவாக்குவதற்குத் தேவையானகல்விச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

சமூகத்தை வலுப்படுத்த நிலம் ஒரு முக்கிய காரணியாகும். எனவே, பயிர்ச்செய்கைக்கு ஏற்ற, ஆனால் இதுவரை பயிரிடப்படாத நிலத்தைப்பயன்படுத்தும்வகையில் புதிய சட்டங்களை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முழு நாட்டையும் வலுவூட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்காக, அரச மற்றும் தனியார் துறையினர் மட்டுமின்றிஅனைத்து சுயதொழில் செய்பவர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதியம்வழங்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.

அதேபோல், ஒரு தொழில்முயற்சியாளர்களைக் கொண்ட நாட்டை உருவாக்க நாமும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.அதனுடன்,அனைவரும் தொழில் கல்வியையும் பெற வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும்முன்னேற்றுவதற்கும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக 'லியசவிய நிகழ்ச்சித்திட்டத்தையும்' நாங்கள் ஆரம்பித்துள்ளோம். மேலும், அஸ்வெசும பெறுபவர்களில் 12 இலட்சம் பயனாளிகளுக்கு வலுவூட்டுவது எமது முக்கிய நோக்கமாகும். அதற்காக இந்த வருடம் 03 இலட்சம் குடும்பங்கள் வலுவூட்டப்பட வேண்டும். அதற்குத் தேவையான சுமார் 188,000 ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

அதன்போது, உலக வங்கி திட்டத்தின் கீழ் 10,000 குடும்பங்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் 16,000 குடும்பங்களையும் வலுவூட்டுத் தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுமுடிக்கப்பட்டுள்ளன. அதற்காக அதிகாரிகளுக்கு வழங்கப்படும்பயிற்சியும்இம்மாதம் நிறைவடையும்.

இளைஞர் சேவைகள் மன்றம், தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் சிறுதோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்துபலசமூகவலுவூட்டல் வேலைத்திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றின் மூலம் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கின்றோம்' என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மேலும் தெரிவித்தார்.

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரியான விலைமனுக்கோரல்கள் இல்லாம்இந்தியநிறுவனாங்களுக்கு எரிசக்தி உற்பத்தியை கையளித்துள்ளனர். தற்போது வழங்குவதை விடவும் அதிகளவு பெறுமதியில் எரிபொருளை வழங்குவதற்கு முயற்சிகளை எடுக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளினால் நாட்டின் பொருளாதாரத்தினைப் பாதிக்கும் வகையில்கொடுக்கல்வாங்கல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

முறையற்ற கொடுகல் வாங்கல்களை முன்னெடுப் பதற்காகவே சட்டமூலங்களை அவசரமாகக் கொண்டுவருகி ன்றனர் என்றும் அவர் கூறினார்.

## தற்போதைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி எந்தவித அதிகாரமும் இன்றி எதிரணியில் இருந்து கொண்டே திருடர்களைப் பிடித்துள்ளது.

ஊழலுக்கு எதிரான வேலைத்திட்டத்தை சாதாரண பெரும்பான்மையால் மாற்றுவதற்கு முடியாதவாறு, அரசமைப்பின் ஊடாக கட்டமையும் பொறிமுறையை ஸ்தாபிக்க வேண்டும்.

இவ்வாறு உருவாகும் பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில், நாட்டை அழித்த அனைவரையும் சட்டத்தின் முன்நிறுத்தி, இழந்தவளங்களையும், சொத்துக்களையும் நாட்டுக்குப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்போம். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுதிபூண்டுள்ளது.

கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அதிகரிப்பதன் மூலம் கல்விப் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. இதற்கு அரச நிதி போதுமானதாக இல்லை.

இதற்கு ஆக்கப்பூர்வமான வேலைத்திட்டம் தேவை. நான் மக்களுக்காக செயல்படும் தலைவர் என்பதால், எனது வேலைத்திட்டத்தை பேசுவதோடு மாத்திரம் மட்டுப்ப டுத்தாது அதை களத்தில் செயல்ப டுத்திக் காட்டியுள்ளேன்.

நான் வாக்குகளைப் பெறுவதற் காக இவ்வாறு பேசவில்லை. 41 இலட்சம் மாணவர்களுக்கும் கல்வியில் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற எண்ணப்பட்டில் இருந்தே இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

வங்குரோத்து நிலையில் இருந்து வெளிவரஅறிவுசார்ந்தபொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு கல்வி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கல்வித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தாது எம்மால் உலகுக்கு ஈடுகொடுத்து போட்டி உலகில் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

இவ்வாறு உண்மையை உண்மையாகப் பேசும் போது சஜித் பிரேமதாசவின் ஆங்கில மொழி, வெளிநாட்டு ஏகாதிபத்திய கல்விக்கு எதிர்ப்பை தெரிவிப்போம் என கடும்போக்கு கம்யூனிச, மார்க்சிச, சோசலிசகுழுக்கள்மக்களைவீதியில் இறக்கக்கூடும்.

இந்நாட்டிலுள்ள ஊழல்களில் ஈடுபடும் தலைவர்கள் தான் இதுபோன்ற விடயங்களை ஊக்குவிக்கின்றனர். தனிப்பட்ட அரசியல் நலனுக்காக மக்களை தூண்டி விடுகின்றனர்.

ஆனால் இவ்வாறு மக்களை தூண்டி விடுபவர்கள் தமது பிள்ளைகளுக்குசிறந்தகல்வியையே வழங்குகின்றனர். அதே சிறந்த கல்வியை நாட்டின் ஏனைய பிள்ளைகளுக்கும் வழங்குவது அவர்களின் பார்வையில் தேச துரோகமாக அமைகிறது. நாம் நாடு குறித்தே சிந்திக்கிறோம்.

இந்த யதார்த்தங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். குறுகிய மனநிலையில் இருந்து கொண்டு செயல்படுவதுஎந்தஅடைவுகளையும் ஈட்டித்தராது.

யதார்த்தமாக சிந்தித்து செயற்பட வேண்டும். இதனாலயே நாம் கல்வியில் காலத்துக்கேற்ற மாற்றம் ஏற்பட வேண்டும்என தொடர்ச்சியாக கூறிவருகிறோம். தற்போதுள்ளகல்வி முறை நிச்சயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# இணுவிலில் சுகாதார சீர்கேட்டுடன் உணவகம் நடத்திய 3 உரிமையாளர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவகங்களை நடத்திய உணவக உரிமையாளர் மூவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் அவர்களுக்கு 60 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துள்ளது.

இணுவில் பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் சி. சிவானுஜன் இணுவில் பகுதியில் உள்ள உணவ கங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற் கொண்டார்.

அதன்போது மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த நிலையில், குறித்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு வெள்ளிக்கிழமை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை தம் மீதான குற்றச்சாட்டுக்களை உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, 25 ஆயிரம், 15 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபா என மூவருக்கும் 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (05)

# களுத்துறையில் ஒருவர் சுட்டுப் படுகொலை

களுத்துறை, கட்டுகுருந்த ரயில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவரின் வீட்டில் வைத்து இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், ரி 56 ரக துப்பாக்கி இதன்போது பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட இளைஞன் கொலை

## விசாரணை தீவிரம்

பேலியகொட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

மினுவாங்கொடை, ஹொரம்பல்ல, வெரகொடமுல்ல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்வதற்காக மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

சென்றவர் மறுநாள் காலைவரை வீடுதிரும்பவில்லை என்பதால் அவரது தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த இளைஞன் தொடர்பில் எவ்விதத் தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இந்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனப் பேலியகொட பொலிஸாரிடமிருந்து தகவல் கிடைத்துள்ளதாக மினுவாங்கொடை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் .

பின்னர், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இளைஞனின் தந்தைக்கு தொலைப்பேசி அழைப்பை மேற்கொண்டுள்ளதாகவும் தனது மகன் அலைபேசியில் அழும் சத்தம் கேட்டதாகவும் தந்தை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிந்துகொள்வதற்காகக் கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி சட்டத்தரணி ஒருவருடன் உயிரிழந்த இளைஞனின் உறவினர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி இளைஞன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் இவர் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் இளைஞனின் தந்தையிடம் தெரிவித்துள்ளார் .

இதேவேளைச், சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞனின் உடலில் காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அவரை வைத்தியசாலையில் சேர்க்குமாறு தந்தை கோரிக்கை விடுத்துள்ளார் .

இளைஞன் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கவுள்ளார் எனப் பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், அவரது உடல் நிலை ஆபத்தான நிலையிலிருந்ததால் இளைஞனைக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இளைஞனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் வைத்தியர்கள் இளைஞனைப் பரிசோதித்த போது இவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் .

அத்துடன் இளைஞனின் மரணத்தின் பின்னர் இவர் தொடர்பில் மினுவாங்கொடை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்ட சிலவிடயங்கள் பொய்யானவை என தந்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அது மாத்திரமன்றி பேலியகொட குற்றத்தடுப்பு பிரிவின் விசாரணை அதிகாரிகளின் கொடூரமான தாக்குதல்களால் இளைஞன் உயிரிழந்துள்ளார் என இளைஞனின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு இந்த விடயம் தொடர்பிலான உண்மைகள் கண்டறியப்படும் என பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (05)

# அதிக மழை வீழ்ச்சி களுத்துறையில் பதிவு

நாட்டில் சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றரிலும் கூடிய பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனையடுத்து, பலத்த மழை வீழ்ச்சிக்கான சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி வரையான காலப்பகுதியில் களுத்துறை மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர பகுதியில் 107 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, களுத்துறை - இங்கிரிய பகுதியில் 79 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், பண்டாரகம பகுதியில் 77 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

அத்தோடு, புத்தளம் மாவட்டத்தில் மாதம்பே பகுதியில் 75 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், கம்பஹா மாவட்டத்தின் கிரிந்திவெல பகுதியில் 72 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (05)

# நன்றி பாராட்டு



(கே எ ஹமீட்)

சம்மாந்துறை கல்வி அபிவிருத்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஆற்றிவரும் சேவைகளைகளை நினைவுகூர்ந்ததோடு எதிர்கால தேவைகளும் சுட்டிக்காட்டப்பட்டது.

சம்மாந்துறை பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பெரும் சேவையாற்றிவரும் சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலத்தின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த சுற்றுமதில் பிரச்சினையை நிவர்த்தி செய்ய பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஒருசேர இணைந்து, நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்தவேண்டுகோளுக்குஇணங்க மிககுறுகியகாலத்துக்குள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு ஜனாதிபதியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 6.5 மில்லியன் நிதியை சம்மாந்துறை தேசிய பாடசாலை சமூகத்திற்கு பெற்றுக் கொடுத்திருந்தார்.

உறுப்பினர் பைசால் காசிமைச் சந்தித்திருந்தமை விஷேட அம்சமாகும்.

மேலும் கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினரால் பாடசாலையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பாரியமைல்கல்லாக பார்க்கப்படும் காபட் வீதியமைப்பு சுமார் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இடம்பெற்றமையை வியந்து பாராட்டியதோடு, எதிர்காலத் தேவைகளாக காணப்படும் வகுப்பறைக் கட்டடம் மற்றும் இலத்திரனியல் இயந்திரங்கள் போன்றவற்றை பெற்றுத்தர கோரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் -

கல்விப் பணியில் மேம்பட்ட ஓர் சமூகமாக சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலத்தின் பாடசாலைச் சமூகம் திகழ்வதற்கு இந் நிகழ்வு சான்று பகர்வதாகவும், தேவைகள் எழுகின்ற போது தயக்கங்கள் ஏதுமின்றி தன்னை அணுக முடியும் எனவும்,



குறித்த விடயத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், சம்மாந் துறை கல்வி அபிவிருத்திக்கு ஆற்றி வரும் சேவைகளைகளை பாராட்டி கௌரவிப்பதற்காகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலத்தின் பாடசாலைச் சமூகம் நாடாளுமன்ற பாடசாலைக்கான கள விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்ததோடு வருகை தந்த அனைவருக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்திருந்தார். (05)

# அரோஹராகோசம் விண்ணைப் பிளக்க களைகட்டிய திருக்குளிர்ச்சி சடங்கு



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் இறுதி நிகழ்வான குளிர்த்தி பாடும் சடங்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை பக்திபூர்வமாக சிறப்பாக நடைபெற்றது.

இம் முறை வைகாசி திருக்குளிர்சி சடங்கு கடந்த காலத்தைவிட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 4 மணியளவில் சடங்கு பூஜையும் திருக்குளிர்த்தி பாடலும் ஆரம்பமாகி காலை 5.30





மணியளவில் நிறைவுற்றது.

கடந்த ஒருவார காலமாக பறை மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் பக்தர்களின் அரோஹரா கோஷம் குரவை ஒலிக்கு மத்தியில் பகலில் பச்சை கட்டல் இரவில் ஊர்சுற்றுக்காவியம் பாடல் இடம்பெற்று வந்தது.

எதிர்வரும் 27ஆம் திகதி எட்டாம் சடங்கு பூஜை இடம்பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.(05)



# நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 33,000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்களில் 33,000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அதன்படி, இரத்தினபுரி, கொழும்பு, கேகாலை, அநுராதபுரம், கண்டி, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதில், 1,827 பேர் தற்காலிகமாக பாதுகாப்பான பதினொருஇடங்களுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திங்கட்கிழமை இரவுதிடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொழும்பு திம்பிரிகஸ்யாய பகுதியில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஒவ்வொரு பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, ஹாலிஎல, பதுளை மற்றும் எல்ல பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜாங்கனை, அங்கமுவ மற்றும் மகாவிலச்சிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் தெதுரு ஓயாவின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தின் உள்ஹிட்டிய ஓயா மற்றும் ரத்கிந்த ஓயாவின் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. புத்தளம் தப்போவ நீர்த்தேக்கம் மற்றும் கலவானையில் உள்ள குகுலே கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றது.

எனவே, இந்த ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்த தாழ்நிலங்களில் வசிப்பவர்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கொடிப்பிலி கேட்டுக்கொண்டுள்ளார்.(05)

# இரத்தினபுரியில் வீடொன்றின் மீது மரம் வீழ்ந்ததில் மூவர் காயம்



இரத்தினபுரி, எகொட எல்லவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மீது பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இந்த மரம் இவ்வாறு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, வீட்டிலிருந்த மூவர் காயமடைந்துள்ளதுடன் வீடும் முழுவதுமாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# புத்தளம் மாவட்டத்தில் மழைவெள்ளத்தில் 32 ஆயிரத்து 710 பேர் இதுவரை பாதிப்பு

(எம்.எச்.எம் சியாஜ்)

சீரற்ற வானிலை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளப்பெருக்கால் 8 ஆயிரத்து 780 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 710 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 9 பிரதேச செயலகப் பிரிவில் 78 கிராம சேவகர் பிரிவில் 8,780 குடும்பங்களை சேர்ந்த 32,710 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 12 கிராம சேவகர் பிரிவில் 6,815 குடும்பங்களைச் சேர்ந்த 25,529 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மாவட்ட செயலாளர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பஸ்ஸில் பயணித்த பெண்ணின் தாலிக்கொடி குடாநாட்டில் களவு

யாழ்ப்பாணத்தில் பஸ்ஸில் பயணித்த பெண்ணொருவரின் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர், பஸ்ஸில் சுழிபுரம் சென்ற பின்னர் , அங்கிருந்து மீள பிறி தொரு பஸ்ஸில் தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே பஸ்ஸில் வைத்து அவரது தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, பஸ் பயணங்களின் போது பெறுமதியான நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பஸ்ஸில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணிப்பவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

# 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட படையினர் சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகல்

பொதுமன்னிப்புகாலத்தின்முடிவில்விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத 15667 இராணுவவீரர்கள் சட்ட ரீதியாக வெளியேற்றப்படவுள்ளனர் என இலங்கை இராணுவ தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

முறையான விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்களுக்கு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வரை சட்ட ரீதியாக சேவையை விட்டு வெளியேறுவதற்காக ஒரு மாத கால பொது மன்னிப்பு காலம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொது மன்னிப்பு காலத்தின் 2023 டிசெம்பர் 31, மற்றும் அதற்கு முன் விடுமுறை இன்றி பணிக்கு சமுகமளிக்காத இராணுவ வீரர்களுக்கு சட்ட ரீதியாக சேவையில் இருந்து விலகுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத 15667 இராணுவவீரர்கள் சட்ட ரீதியாக வெளியேற்றப்படவுள்ளனர்.

மேலும், மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அனுமதி இன்றி கடமைக்கு சமுகமளிக்காமல் தற்போது வெளிநாட்டில் இருக்கும் இராணுவத்தைச் சேர்ந்த 373 பேர் இராணுவத்தை விட்டு வெளியேறுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என இராணுவ தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# கற்பிட்டியில் வெள்ளம் பாதித்த மக்களுக்குச் சமைத்த உணவு

## ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி அமைப்பாளரின் ஏற்பாடு

(எம்.எச்.எம். சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 1000 குடும்பங்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் சமைத்த உணவு வழங்கும் நிகழ்வு ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி அமைப்பாளர் எம்.எப்.எம். றில்மியாஸின் ஏற்பாட்டில் இடம்பெறுகின்றது.

இதில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கற்பிட்டி பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி முனசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் தொகுதியின் மகளீர் அணியின் செயலாளர் கலைச்செல்வி ஆகியோருடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாற்றுத் திறனாளிகளுக்கு சமூக மட்டத்தில் புனர்வாழ்வளித்தல் தொடர்பாக கலந்தாய்வு







(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசசெயலகப்பகுதியில்உள்ள மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் புனர்வளித்தல் மற்றும் பிரதேச மட்ட சுய உதவி குழு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சேருவில பகுதியில் இயங்கி வரும்' சகனசெவன' அமைப்பின் மாற்றுத் திறனாளிகளின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவூட்டினர். பிரதேச மட்டத்தில் சுய உதவி குழு அமைப்பின் மூலமாக தங்களது மாற்றுத் திறனாளி அமைப்புக்களை எதிர்காலத்தில் திறம்பட வலுவூட்டுவதன் மூலம் அவர்களது செயற்பாடுகளை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில் மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள மருதம் மாற்றுத் திறனாளி சங்கத்தினர் உட்பட பெற்றார், பாதுகாவலர் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# பாடசாலை மாணவன் மாயம் : பொலிஸார் தீவிர விசாரணை

மதுரங்குளி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மூன்று நாள்களாகக் காணாமல் போயுள்ளார் என மதுரங்குளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையில் 7 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாணவன் மதுரங்குளி பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் இவரது பெற்றோர்கள் இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் மாணவனின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்வதால் அவரது பாட்டி வீட்டில் தங்கியிருந்தார் எகத் தெரிய வந்துள்ளது .

காணாமல் போன மாணவன் தொடர்பிலான விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)

# உலகத் தேயிலைத் தினத்தை முன்னிட்டு இரத்தினபுரியில் நேற்று பெரும் பேரணி




உலகதேயிலைதினத்தைமுன்னிட்டுஇரத்தினபுரி நகரில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு சமுக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இந்த பேரணியில் கண்டி. நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, சேகாலை உள்ளிட்ட மலையக மாவட்டங்களை சேர்ந்த பெருந்தோட்ட தொழிலாளர்கள், சிவில் அமைப்புக்களை சேர்ந்தவர்கள், நகர வர்த்தகர்கள் நலன் விரும்பிகள் உள்ளிட்ட சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணி காலை 9.00 மணிக்கு



இரத்தினபுரி மாநகர சபை முன்றிலில் ஆரம்பமாகி நகரமத்தியிலுள்ள மணிக்கூட்டு கோபுர வழியாக மீண்டும் மாநகர சபை மண்டபத்தை அடைந்தது.

அதன் பின்னர் மாநகர சபை மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பிரிந்து சென்றனர்.

200 வருடமாக மலையக மக்கள் அடிமையாக உள்ளனர்.

அவர்களுக்கு சமமான சகல உரிமைகளும் இணைக்கப் பெற வேண்டும் என கோரிக்கை விடுத்ததுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் தொழிலாளர்கள் அவ்வப்போது தாக்கப்படுவது முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிகழ்வில் மலையக அபிவிருத்தி நிறுவக நிரைவேற்றுப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், பேராசியர் செயற்பட்டார். விஜயச்சந்திரன் கலாநிதி ரமேஸ், சிவில் கூட்டமைப்பு தலைவர் சமிந்த பியசேகர, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# வற்றாப்பளை கண்ணகி அம்மனை தரிசித்துவிட்டு வீடு திரும்பிய பக்தர்களுக்கு ஏற்பட்ட சோகம்



யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு - சாந்தை பகுதியில் இருந்து வற்றாப்பளை ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்துவிட்டு வந்த பக்தர்கள் பஸ் குடைசாய்ந்த நிலையில் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

மேற்குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் ஒன்றுசேர்ந்து பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வற்றாப்பளைகண்ணகிஅம்மன்ஆலயத்திற்குசென்று தரிசனம் செய்துவிட்டு நேற்று (செவ்வாய்க்கிழமை) காலையாழ்ப்பாணம்நோக்கிவந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில், பூநகரி பாலம் தாண்டி வந்துகொண்டிருந்த போது பஸ் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்நிலையில் பஸ்ஸில் பயணித்த ஆறு பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், அவர்கள் பூநகரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# காலி வர்த்தக நிலையத்தில் கொள்ளை; நால்வர் கைது

காலி ,இமதுவ பிரதேசத்தில் உள்ள வர்த்தகநிலையமொன்றிற்குள்அத்துமீறி நுழைந்து அங்கிருந்தவர்களிடம் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வக்வெள ,எம்பிலிப்பிட்டிய மற்றும் அக்குரஸ்ஸ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 45 முதல் 61வயதுக்குற்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் மூன்று தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் கொள்ளையிடப்பட்ட வர்த்தக நிலையத்திற்கு அருகில் உள்ள மற்றுமொரு வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் என்பதுடன் அவரது கண்காணிப்பின் கீழ் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இவர்கள் நால்வரும் இதற்கு முன்னர் வத்தளை, எம்பிலிப்பிட்டிய மற்றும் மித்தெனிய ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில்கொள்ளையிட்டுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இளம் பெண் இறப்புக்குக் காரணமான ராணுவச் சிப்பாய்க்கு விளக்கமறியல்



யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி யுவதி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இராணுவ வாகன சாரதியான இராணுவ சிப்பாய் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் - கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்தியில் திங்கட்கிழமை இராணுவத்தினருக்கு சொந்தமான ஹயஸ் ரக வாகனம் வீதியோரமாக, வீதியை கடக்க சைக்கிளுடன் காத்திருந்த யுவதியை மோதி விபத்துக்கு உள்ளானதில் யுவதி உயிரிழந்திருந்தார்.

வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த சுதாகரன் சாருஜா (வயது 23) என்பவரே தனது 23 ஆவது பிறந்தநாளில் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த அச்சுவேலி பொலிஸார் , வாகன சாரதியான இராணுவ சிப்பாயை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் பின்னர் இராணுவ சிப்பாயை மல்லாகம் நீதிவான்நீதிமன்றில்முற்படுத்தியபோது , சிப்பாயை 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, குறித்த வாகனத்தில் இராணுவ உயர் அதிகாரிகள் பயணித்ததாகவும் , அவர்களில் இருவர் காயமடைந்த நிலையில் பலாலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# ஈரான் ஜனாதிபதி இப்புக்காக அம்பாறையில் கடையடைப்பு





(பாறுக் ஷிஹான்)

ஈரான் ஜனாதிபதி உயிரிழப்பால் நேற்று இலங்கையில் துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை



பகுதியில்அனுதாபம்தெரிவித்துவர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன் ஆங்காங்கே வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

ஈரான் நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அவருடன் பயணித்த வெளி விவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் அதிகாரிகள் ஹெலிக்கொப்டர் விபத்தில் மரணம் அடைந்தனர்.

அவர்களின் மறைவை தொடர்ந்து உலகளாவிய ரீதியிலும் இலங்கை ரீதியிலும் நேற்று துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்துசம்மாந்துறை பிரதேச மக்கள் தங்கள் அனுதாபத்தை வெளிப்படுத்தி வியாபார தளங்கள் உணவு சாலைகள் மற்றும் பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதை காண முடிந்தது.(05)

# நிதி ஒதுக்கீடு



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள அட்டாளைச்சேனை ஜும்ஆபெரியபள்ளிவாசலுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்துஒதுக்கப்பட்டநிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்கள் பள்ளிவாசல்நிர்வாகத்தினிடம் கையளிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனைஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கட்டட நிர்மாண பணிகளுக்கென ஜும்மா பள்ளிவாசல் மரைக்காயர் சபை தலைவர் ஏ.பீ.எம். அப்துல் காதர், நம்பிக்கையாளர் சபை பிரதிதலைவர்களான டாக்டர் எஸ்.எம். முனாஸ், டாக்டர் யூ.எல். இஸ்மாயில் செயலாளர் எம்.எஸ். ஜௌபர், மரைக்காயர் சபை செயலாளர் என்.எம். சம்சுதீன், பொருளாளர் ஏ.பி அப்துல் கபூர், நம்பிக்கையாளர் சபை பொருளாளர் ஐ.எம். றமீஸ் ஆகியோர் அடங்களாக பள்ளிவாசல் மரைக்காயர்கள் மற்றும் நிர்வாகத்தினரை சந்தித்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அட்டாளைச்சேனை மக்களின் பிரச்சினைகள், குறைநிறைகளை ஆராய்ந்ததுடன், எதிர்கால அட்டாளைச்சேனைஅபிவிருத்தி நடவடிக்கை தொடர்பிலும் கலந் துரையாடினார்.

இதன்போது அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரியபள்ளிவாசல்நிர்வாகிகள் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸுக்கு எடுத்துரைத்தனர். தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்களையும்ஹரீஸ்எம்.பி இதன்போது கையளித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர்களான எம்.ஜே.எம். அன்வர் நௌசாத், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், பெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2024இல் வெளியிடப்பெற்றது